**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

முன்னிலை : **திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4–ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

**நி.ம.எண்.11/2020 இன் அ.வ.எண்.19/2006**

சஞ்சீவி பெருமாள் . . . மனுதாரர்/வாதி

**/எதிர்/**

A.தமிழரசன் . . . எதிர்மனுதாரர்/பிரதிவாதி

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் தரப்பில் இம்மனு கட்டளை 21 பிரிவு 11, 54 மற்றும் 66–ன் படி, மனுவில் கண்ட கூடுதல் தொகையை செலுத்தக் கோரியும், தவறும் பட்சத்தில் மனு சொத்துக்களை ஜப்தி செய்து, ஏலம் விட்டு, தொகையை வசூல் செய்து தர உத்தரவு பிறப்பிக்கக் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் : 26.02.2020

இறுதி விசாரணை நடைபெற்ற நாள் : 14.03.2025

உத்தரவு பகரப்பட்ட நாள் : 04.07.2025

மனுதாரர்/வாதிக்காக : திரு.R.கிருஷ்ணசாமி –வழக்கறிஞர்

எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்காக : திரு.KSM.சாகுல் அமீது – வழக்கறிஞர்

**1). மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவின் மனுதாரரிடம் எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி, கடன் தொகை பெற்றுக்கொண்டு மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்தாக காரணத்தினால், எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்து, ஏல நடவடிக்கைக்கு உட்படுத்தி, சொத்தினை கிரையம் செய்து அதன் மூலம் கிடைக்கும் தொகையினை மனுதாரருக்கு செலுத்த உத்தரவிட வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இதர சங்கதிகள் உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. அ.வ.எண்.19/2006 என்ற வழக்கில் தீர்ப்பு ஏற்பட்டது உண்மை. மேற்படி தீர்ப்பை எதிர்த்து கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, அம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், இந்த எதிர்மனுதாரர் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. இந்த விவரம் அனைத்து மறைத்து தாக்கல் செய்யப்பட்ட மனு நிலைக்கத்தக்கதல்ல. மனு சங்திகள் அனைத்தும் தவறானவை. மனு முகாந்திரமும், காரணமும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**3).** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர் மற்றும்

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4).** மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5). <u>தீர்வு :–</u>

**(அ).** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரரிடம் எதிர்மனுதராரர்/தீர்ப்பு கடனாளி கடன் தொகை பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்தாக காரணத்தினால் எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்து, ஏல நடவடிக்கைக்கு உட்படுத்தி சொத்தினை கிரையம் செய்து அதன் மூலம் கிடைக்கும் தொகையினை மனுதாரருக்கு செலுத்த உத்தரவிட வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ).** எதிர்மனுதாரர் தரப்பில், அ.வ.எண்.19/2006 தீர்ப்பு ஏற்பட்ட சங்கதியை உண்மை என ஒப்புக்கொண்ட போதிலும், மேற்படி தீர்ப்பை எதிர்த்து கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், பின்னிட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதியானவர் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளதாக கூறியுள்ளார். மேற்படி சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. மேலமை நீதிமன்றங்களில் இருந்து அ.வ.எண்.19/2006 தீர்ப்பினை நசித்து விட்டதாகவோ,

மேற்படி தீர்ப்பினை நிறுத்தி வைக்கக் கோரியோ எவ்வித அறிவிப்பும் இந்நீதிமன்றத்தால் பெறப்படவில்லை. எதிருரையில் ஒரு சங்கதியை தெரிவித்ததனாலேயே அதனை சாட்சியமாக கருத்தில் கொள்ள இயலாது. மனுதாரர் தீர்ப்பின் பலனை பெறுவதற்கு உரிமை உடையவர் ஆவார். எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

6). **முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தினை பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது. பற்றுகைக்காக படி செலுத்த கால அவகாசம் 7 நாட்கள். அழைக்க வாய்தா : **08.08.2025**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 4–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(sd/–) E.Muthusamy

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u>** இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u>** இல்லை.

(sd/–) E.Muthusamy

சார்பு நீதிபதி,
குளித்தலை.